# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## விவசாயத்துறையில் தொழில்நுட்பத்தின் பயன்பாடு குறித்த அறிவைப் பகிர்தல்: வடக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் விவசாய உற்பத்தித்திறனை ஊக்குவிக்க RoWeR விவசாய இயந்திரங்களின் பயன்பாட்டிற்கு வழிகோலும் இந்திய உயர் ஸ்தானிகராலயம்

இலங்கை அரசாங்கம் விவசாயத்துறை சார்ந்த புரட்சிக்காக முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு அமைவாக, கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் சார்பில் கண்டியில் உள்ள உதவி இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கொன்சுலேட் ஜெனரல் காரியாலயம் ஆகியவை இந்தியாவின் Mechcreatio Industrial Solutions Pvt நிறுவனத்துக்கு சொந்தமான வர்த்தக நாமமான RoWeR இலிருந்து மேம்பட்ட விவசாய இயந்திரங்களின் நேரடி செயன்முறை விளக்கங்களை வழங்குவதற்கான ஆதரவை வழங்கியிருந்தது.

2. கண்டி, மாத்தளை, நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய இடங்களில் REDA, மத்திய மாகாணம், விவசாயத் திணைக்களம், லயன்ஸ் கழகம், மகளிர் வர்த்தக சங்கம் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து இந்த செயன்முறை விளக்க அமர்வுகள் நடத்தப்பட்டன.

3. அதனைத் தொடர்ந்து, விவசாய உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இக்குழுவினர், கிளிநொச்சியில் உள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் வளாகங்களிலும், யாழ்ப்பாணம் பலாலி வீதியில் உள்ள விவசாயத் துறை பிரதி மாகாண பணிப்பாளர் அலுவலகத்திலும் இந்திய கொன்சுலேட் காரியாலயத்தால் நடத்தப்பட்ட செயன்முறை விளக்க அமர்வுகளில் கலந்துகொண்டனர். இந்திய கொன்சுலேட் காரியாலய அதிகாரிகளும் இந்த செயன்முறை விளக்க அமர்வுகளை நேரடியாக பார்வையிட்டனர்.

4. இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் பல்வேறு விவசாயத்துறைக் கற்கைகளை சேர்ந்த 50 க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பீட உறுப்பினர்கள், மத்திய, ஊவா மற்றும் வட மாகாணங்களைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்ட விவசாயிகள், விவசாயத்துறை சார்ந்த கள அதிகாரிகள் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் வளவாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் பங்கேற்றோர் RoWeR இன் புதுமையான விதைப்பு மற்றும் பிற அதிநவீன விவசாய இயந்திரங்கள் மூலமான செயற்பாடுகள் குறித்த அனுபவத்தைப் பெற்றனர், இவ்வாறான கருவிகள் விவசாய நடைமுறைகளில் உற்பத்தி மற்றும் செயல்திறனை மேம்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த முன்னெடுப்புகள், உள்ளூர் விவசாயிகள் மற்றும் விவசாய நிபுணர்களின் அறிவு மற்றும் திறன்களை

மேம்படுத்தும் நோக்கத்துடன் இலங்கை விவசாயத் துறைக்கு ஆதரவளிப்பதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகின்றன.

************

**கொழும்பு**
**23 டிசம்பர் 2024**